சென்னை, கிண்டியில் உள்ள நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய மையக் கூட்டரங்கில் நேற்று (03.08.2023), பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, மாநில அளவில் நடைபெற்று வரும் நில எடுப்புப் பணிகள், சாலைகள், சாலை மேம்பாலங்கள், இரயில்வே மேம்பாலங்கள், ஆற்றுப்பாலங்கள், புறவழிச்சாலைகள், ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை தரம் உயர்த்தும் பணிகள் தொடர்பாக, பணிகளின் முன்னேற்றம் குறித்தும் அனைத்து அலகு அலுவலர்களுடான ஆய்வு கூட்டம் நடைப்பெற்றது. இக்கூட்டத்தில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், நெடுஞ்சாலைத் துறையின் தலைமைப் பொறியாளர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

நெடுஞ்சாலைத் துறையின்

அனைத்து அலகுகளின் மாநில அளவில் ஆய்வுக் கூட்டம்!

அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் நடைபெற்றது!

சென்னை, ஆக. 4 - பொதுப்பணிகள், நெடுஞ்சாலைத் துறை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ. வேலு தலைமையில் நெடுஞ்சாலைத் துறையின் அனைத்து அலகுகளின் மாநில அளவில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, நெடுஞ்சாலைத் துறையின் மாநில அளவில் அனைத்து அலகுகளில் நடைபெற்று வரும் பணிகள் குறித்து 3.8.2023 மற்றும் 4.8.2023 ஆகிய இரண்டு நாட்களும் ஆய்வுக் கூட்டம் நடைபெற உள்ளது.

3.8.2023 அன்று நெடுஞ்சாலைத் துறையின் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகு மற்றும் நபார்டு மற்றும் கிராம சாலைகள் அலகின் ஆய்வு கூட்டம் நடைபெறுகிறது. முதல் நாள் ஆய்வுக் கூட்டத்தினை துவக்கி வைத்து பொதுப் பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, தனது துவக்க உரையில், நெடுஞ்சாலைத் துறையில் 10 அலகுகள் உள்ளன. இதில் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு பிரிவு முக்கிய அலகு ஆகும். இந்த அலகில் பணியாற்றுவதே பெருமைக்குரியதாகும்.

சென்னை இராஜதானியில். (தமிழ்நாடு, ஆந்திரா, தெலுங்கானா, ஒரிசாவின் இரு மாவட்டங்கள், கேரளாவின் ஒரு பகுதியில்,) 1941ம் ஆண்டு மோட்டார் வாகனங்கள் - 20,673,

1947ம் ஆண்டு மோட்டார் வாகனங்கள் - 21,560, 7 ஆண்டுகளில் (1941 முதல் 1947 வரை) வாகனங்களின் எண்ணிக்கை 887 மட்டுமே உயர்ந்தது. ஆனால் இன்று தமிழகத்தில் மட்டுமே 31.03.2023ன்படி வாகனங்களின் எண்ணிக்கை 325 இலட்சம் என கணக்கிடப்பட்டுள்ளது.

கற்பனைக்கு எட்டாத அளவில் வாகன வளர்ச்சி உள்ளது. இதற்கு ஏற்றவாறு தமிழகத்தின் சாலைகளை பராமரிக்கும் மிகப் பெறும் பொறுப்பு உங்களைத் தான் சாரும். தமிழ்நாடு அரசு மூலதன ஒதுக்கீட்டின் கீழ் 40 சதவீதம் அதாவது, ரூ.17,435 கோடி நிதியினை நெடுஞ்சாலைத் துறைக்கு வழங்கியுள்ளது. ,கட்டுமானம் (ம) பராமரிப்பு அலகு நெடுஞ்சாலைத்துறை, விரைவான மற்றும் பாதுகாப்பான போக்குவரத்து அமைப்பினை உருவாக்குவதையே குறிக்கோளாகக் கொண்டு செயல்படுகிறது. நெடுஞ்சாலைத் துறையில் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு ஒரு முக்கிய அலகாகும். கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகு 66,382 கி.மீ. நீள சாலைகளை பராமரிக்கிறது. இவ்வலகானது பல்வேறு சாலை அகலப்படுத்தும், பலப்படுத்தும், மேம்படுத்தும் பணிகள், பாலப்பணிகள் சாலைப் பாதுகாப்புப் பணிகள், மற்றும் அவசர வெள்ளச் சீரமைப்புப் பணிகள் போன்றவற்றை மேற்கொள்கிறது.

முதலமைச்சரின் சாலை மேம்பாட்டு திட்டப் பணிகள்:

முதலமைச்சர் சாலை மேம்பாட்டு திட்டத்தில் 2021-22 மற்றும் 2022-23ல் எடுக்கப்பட்ட 64 நான்கு வழி சாலை பணிகளில், 9 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 55 பணிகளை விரைந்து முடிக்கப்பட வேண்டும்.

முத்திரைப் பணிகள்:

6 முத்திரைப் பணிகள் விரிவாக ஆய்வு செய்து விரைந்து செயல்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும்.

தொழிற்துறை தொடர்பான வைப்பு நிதி பணிகள் சிப்காட், டாட்டா, ஓலா போன்ற பல்வேறு தொழில் துறை சம்பந்தமான 9 வைப்பு நிதி பணிகளை சிறப்பு கவனம் செலுத்தி, ஆய்வு செய்து விரைந்து முடித்திட வேண்டும் என வும், ஒரு ஆண்டுக்கு கீழ் உள்ள நிலுவைப் பணிகள் மற்றும் ஒரு ஆண்டுக்கு மேல் உள்ள பணிகள் விரிவாக ஆய்வு செய்யப்பட்டு நீண்ட நாள் முடிக்கப்படாமல் உள்ள பணிகள் விரைந்து முடித்திட வேண்டும்.

வரவு செலவு திட்ட மதிப்பீடு கொண்டு தற்போது தற்போது வரை 34 சதவீதம் செலவிடப்பட்டுள்ளது. மீதமுள்ள பணிகளை விரைந்து முடிக்க வேண்டும் என அறிவுறுத்தினார்கள்.

புறவழிச் சாலைப்பணிகள்!

மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளுக்கு புறவழிச் சாலைகள் அமைக்கும் பணிகளை தனி கவனம் செலுத்திசெயல்படுத்த வேண்டும். விரிவான திட்ட அறிக்கை நிலையில் உள்ள 12 பணிகள் மற்றும் மற்றும் நில எடுப்பு நிலையில் உள்ள 28 பணிகள், ஆக 40 பணிகளை தனி கவனம் செலுத்தி செயலாக்கத்திற்கு கொண்டு வரவேண்டும்.

சாலைப் பாதுகாப்புப்பணிகள்

சாலை பாதுகாப்பு பணிகளில் விபத்து கரும்புள்ளி பகுதி பணிகள், ஹாட்ஸ்பாட் பணிகள் போன்ற பணிகளுக்கு முக்கியத்துவம் தந்து தகுந்த பொறியியல் சீரமைப்பினை மேற்கொள்ள வேண்டும்.

அனைத்து விபத்து கரும்புள்ளி பகுதி பணிகளிலும், மேலும் விபத்து நடைபெறாத வண்ணம் பணிகளை மேற்கொள்ள வேண்டும். மேலும், சாலைகளில் கனரக வாகனங்களில் அனுமதிக்கப்பட்ட அளவைவிட கூடுதலாக சுமை ஏற்றிச் செல்வதால், சாலைகளின் தாங்கும் திறன் பாதிக்கப்படுகிறது. சாலைகளில் போக்குவரத்து தரவுகளை கணக்கில் கொண்டு தான் சாலைகள் அமைக்கப்படுகின்றன. சாலைகள் பழுதாவதை தவிர்க்க ஆலோசனைகள் வழங்கினார்.

கலைஞர் நூற்றாண்டு விழா

100 இடங்களில் மரக்கன்றுகள் நடுதல், 100 பாலங்கள் கட்டுதல், 100 பாலங்கள் புனரமைத்தல், 100 இடங்களில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு முகாம் போன்ற பணிகளுக்கு முக்கிய கவனம் செலுத்த வேண்டும் என கேட்டு கொண்டார்கள்.

நாளிதழ்கள், தொலைக்காட்சிகள், சமூக வலைதள செய்திகளில் குறிப்பிட்ட சாலைகள் மற்றும் பாலங்கள் குறித்த செய்தி வெளியாகும் போது, அது குறித்து உடனடியாக சீர் செய்து, தலைமை பொறியாளர்களுக்கும், அரசு கூடுதல் தலைமை செயலாளருக்கும் விரிவான அறிக்கையை அனுப்ப வேண்டும் எனவும் பத்திரிக்கைகளுக்கு செய்தியை உடனடியாக அனுப்ப வேண்டும்.

சாலை பராமரிப்பு பணிகளுக்கு முக்கியத்துவம் தர வேண்டும். மரங்களுக்கு வண்ணம் பூசுதல், பாலங்கள் / சிறுப்பாலங்கள் சீரமைத்தல் புருவங்களை செம்மைப் படுத்துதல், சாலை பாதுகாப்பு போன்ற பணிகளை அவ்வப்போது செய்யப்பட வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

மேலும் எனது கள ஆய்வின் போதும் மற்றும் உயர் அதிகாரிகள் ஆய்வின் போதும், இது குறித்த சுணக்கம் இருந்தால் கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவித்தார்.

ஆகஸ்ட் மாதம் பாலங்கள் பராமரிப்பு மாதமாக கடைப்பிடிக்கப்படுவதால், சிறு பாலங்கள், குழாய் பாலங்கள் அனைத்தையும் சுத்தப்படுத்தி நீர் வழி பாதைகளில் உள்ள அடைப்புகளை அகற்றி பராமரிக்க வேண்டும். பாலங்களை வெள்ளை அடித்து நல்ல முறையில் பராமரிக்க வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

தமிழ்நாடு முழுவதும் நான் கள ஆய்வு செய்ய உள்ளதாகவும், ஆய்வின் போது பாலங்கள் பராமரிப்பு குறித்து சிறப்பு கவனம் செலுத்தி ஆய்வு செய்ய உள்ளதாகவும், கண்காணிப்பு பொறியாளர்களும் கோட்ட பொறியாளர்களும் தனி கவனம் செலுத்தி பாலங்கள் பராமரிப்பை உரிய முறையில் செயல்படுத்திட வேண்டும் என இந்த ஆய்வுக் கூட்டத்தில் அறிவுரை வழங்கினார்கள்.

மேலும், 3.7.2023 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இத்துறையின் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டதில் சுட்டிகாட்டிய பணிகளின் முன்னேற்றத்தையும் ஆய்வு செய்தார்கள்.

இரண்டாவது நாளாக இன்று (4.8.2023) தேசிய நெடுஞ்சாலை, திட்டங்கள், மாநகரம், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம், சென்னை கன்னியாகுமரி தொழில்தடத் திட்டம், தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம், தமிழ்நாடு சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டு கழகம் ஆகிய அலகுகளின் பணிகள் குறித்த மாநில அளவிலான ஆய்வுக்கூட்டம் நடைபெற உள்ளது.

ஆய்வுக் கூட்டத்தில், மாநில அளவில் நடைபெற்று வரும் நில எடுப்பு பணிகள், சாலைகள், சாலை மேம்பாலங்கள், இரயில்வே மேம்பாலங்கள், ஆற்றுப்பாலங்கள், புறவழிச்சாலைகள், ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை தரம் உயர்த்தும் பணிகள் மற்றும் முதலமைச்சரின் சாலை மேம்பாட்டுத் திட்டப் பணிகள் தொடர்பாக தற்போது பணிகளின் முன்னேற்றம் குறித்தும் முதலமைச்சர் அவர்கள் பல்வேறு ஆலோசனைகள் மற்றும் அறிவுரைகள் குறித்து வழங்கிதன் அடிப்படையில் அனைத்து அலகு அலுவலர்களுடான ஆய்வு கூட்டம் நடைபெறுகிறது.

இந்த ஆய்வு கூட்டத்தில், அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், திட்ட இயக்குநர் மருத்துவர் எஸ்.பிரபாகர், நெடுஞ்சாலைத் துறையின் தலைமைப் பொறியாளர், கண்காணிப்பு பொறியாளர், கோட்டப் பொறியாளர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொள்கின்றனர்.

ஒன்றிய அரசின் விளையாட்டுத் துறை மூலம் பயன்பெற்ற

தமிழ்நாடு விளையாட்டு வீரர்களின் விவரங்கள் என்ன?

மக்களவையில் கனிமொழி கருணாநிதி கேள்வி!

புதுடெல்லி, ஆக. 4 - விளையாட்டுத் துறை தொடர்பாக திமுக துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற திமுக துணைத் தலைவருமான கனிமொழி எம்.பி. எழுத்துபூர்வமாக ஆகஸ்டு 1 ஆம் தேதி நாடாளுமன்றத்தில் கேள்விகளை எழுப்பினார்.

முன்னாள் விளையாட்டு வீரர்களின் நலனுக்கான திட்டங்களின் விவரங்கள் மற்றும் பயனாளிகளின் எண்ணிக்கை, விளையாட்டு வாரியாக என்ன?

ஏழைக்குடும்பங்களைச் சேர்ந்த இளம் விளையாட்டு வீரர்களை ஆதரிப்பதற்கான திட்டங்களின் விவரங்கள் மற்றும் அத்தகைய திட்டங்களில் பயனாளிகளின் எண்ணிக்கை என்ன? குறிப்பாக தமிழ்நாட்டில் பயன் பெறும் பயனாளிகளின் எண்ணிக்கை?

நலத் திட்டங்கள் மூலம் தமிழ்நாட்டில் பயன் பெறும் முன்னாள் மற்றும் இளம் விளையாட்டு வீரர்களின் விவரங்கள் மாவட்ட வாரியாக என்னென்ன?"

ஆகிய கேள்விகளை எழுத்துபூர்வமாக கனிமொழி கருணாநிதி எம்பி கேட்டிருந்தார்.

இந்த கேள்விகளுக்கு ஒன்றிய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் அனுராக் சிங் தாக்கூர் எழுத்துபூர்வமாக பதிலளித்துள்ளார்.

அது வருமாறு:

அதில், "சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு ஒய்வூதியம் வழங்குவதற்கான ஸ்போர்ட்ஸ் ஃபண்ட் என்ற திட்டத்தை ஒன்றிய அரசு செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்தின் மூலம் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு மாதாந்திர வருமானம் உறுதிப்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டத்தின் மூலம் முன்னாள் விளையாட்டு வீரர்களுக்கு மாதம் 12 ஆயிரம் ரூபாயில் இருந்து 20 ஆயிரம் ரூபாய் வரை ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. இது தொடர்பான விவரங்கள்விளையாட்டுத் துறை அமைச்சகத்தின் இணையதளத்தில் https://yas.nic.in. இருக்கின்றன.

நாட்டில் இருக்கும் ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த இளம் விளையாட்டு வீரர்களை ஊக்குவிப்பதற்காக, 'பண்டிட் தீன்தயாள் விளையாட்டு வீரர்களுக்கான தேசிய நல நிதியம்' (PDUNWFS) என்ற திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்தத் திட்டத்தின் மூலம் ஆதரவற்ற சூழ்நிலையில் வாழும் விளையாட்டு வீரர்கள், அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு மருத்துவ சிகிச்சை, விளையாட்டு உபகரணங்கள் வாங்குதல் போன்றவற்றுக்காக நிதி உதவி செய்யப்படுகிறது.

இந்தத் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேச வாரியாக பயன்பெற்ற பயனாளிகளின் பட்டியல் அமைச்சகத்தின் இணையதளத்தில் https://yas.nic.in. கிடைக்கிறது

விளையாட்டு வீரர்களுக்கான ஒய்வூதியத் திட்டம், மற்றும் பண்டிட் தீன்தயாள் உபாத்யாய் தேசிய நல நிதியத் திட்டம் ஆகியவற்றில் மாவட்ட வாரியாக பயன்பெற்றோரின் விவரங்களை ஒன்றிய அரசு பராமரிக்கவில்லை"

இவ்வாறு ஒன்றிய இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் அனுராக் சிங் தாக்கூர் பதிலளித்தார்.

அரியானா வன்முறை: போலீசார் முன்னிலையில்

பஜ்ரங் தள் அமைப்பினர் துப்பாக்கிச் சூடு நடத்தியது அம்பலம்!

வீடியோ காட்சிகள் வெளியாகி பரபரப்பு!

சண்டிகர், ஆக. 4 - அரியானா வன்முறையின் போது போலீசார் முன்னிலையில் பஜ்ரங்தள் அமைப்பினர் துப்பாக்கிச் சூடு நடத்திய வீடியோ காட்சிகள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பா.ஜ.க. ஆளும் அரியானாவில் நூஹ் மாவட்டத்தில் இரு தினங்களுக்கு முன்னர், விஸ்வ இந்து பரிஷத் அமைப்பினர் நடத்திய யாத்திரையில் வன்முறை வெடித்தது. பஜ்ரங்தள், வி.ஹெச்.பி. ஆகிய இந்து அமைப்பினரின் செயல்பாடுகளால் அம்மாநிலத்தில் பதற்றம் அதிகரித்துள்ளது.

இதனிடையே, வன்முறை ஏற்பட்ட போது, பஜ்ரங்தள் அமைப்பினர் துப்பாக்கிச் சூடு நடத்திய காட்சிகள் தற்போது வெளியாகி உள்ளது. போலீசார் முன்னிலையிலேயே, இந்து அமைப்பினர் துப்பாக்கிச் சூட்டில் ஈடுபடுவது பரபரப்பையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

ஹரியானாவில் வன்முறை ஏற்பட்ட பகுதிகளில் வரும் 5ம் தேதி வரை இணைய சேவை முடக்கப்பட்டுள்ளது.

ஹரியானாவில் நூஹ் மாவட்டத்தில் விஸ்வ இந்து பரிஷத் அமைப்பினர் நடத்திய யாத்திரையில் வன்முறை வெடித்ததில் நூற்றுக்கும் மேற்பட்ட வாகனங்கள், கடைகள் அடித்து நொறுக்கப்பட்டு, தீயிட்டு கொளுத்தப்பட்டன. வன்முறையில் 2 போலீசார் உள்பட 5 பேர் உயிரிழந்தனர். 80 பேர் காயமடைந்தனர்.

இந்த வன்முறைச் சம்பவம் தொடர்பாக 40க்கும் மேற்பட்ட வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கலவரம் ஏற்பட்ட நூஹ், பரிதாபாத், பல்வல், சோனா, பட்டோடி, மானேசர் ஆகிய இடங்களில் ஆகஸ்ட் 5 வரை செல்போன் இணைய சேவை துண்டிக்கப்பட்டுள்ளது. காவல்துறையினர் குவிக்கப்பட்டு தீவிர ரோந்து பணிகள் நடைபெற்று வருகிறது. சமூக வலைதள பதிவுகளை கண்காணிக்கக் குழு ஒன்றையும் அரியானா அரசு அமைத்து உத்தரவிட்டுள்ளது.

தென்காசி வடக்கு மாவட்டம் மேலநீலிதநல்லூர் தெற்கு,கிழக்கு, மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் குருக்கள்பட்டி அபிஷேக திருமண மஹாலில் ஒன்றியத்திற்கு உட்பட்ட (BLA2) பூத் கமிட்டி முகவர்கள் கூட்டம் தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ராஜா எம்.எல்.ஏ.தலைமையில் மேல நீலிதநல்லூர் ஒன்றிய செயலாளர்கள் பெரியதுரை,வெற்றிவிஜயன், ராமச்சந்திரன் ஆகியோர் முன்னிலை யில் நடைபெற்றது. நிகழ்வில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் பரமகுரு, மாவட்ட துணைச் செயலாளர்கள் மனோகரன், புனிதா, ராஜதுரை, பொதுக்குழு உறுப்பினர்கள் மகேஸ்வரி, தேவா, சங்கரன்கோவில் நகரச் செயலாளர் பிரகாஷ், உள்பட மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், ஒருங்கிணைந்த ஒன்றிய கழகத்தின் பூத் கமிட்டி உறுப்பினர்கள், அவை தலைவர்கள், ஒன்றிய துணைச் செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், கிளை கழக செயலாளர்கள், ஒன்றிய பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் திரளாக கலந்து கொண்டனர்.

அமைச்சர் கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் சிறப்புரை!

தென்காசி தெற்கு மாவட்ட கழக செயல் வீரர்கள் கூட்டம்!

மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் அறிக்கை!

தென்காசி, ஆக. 4 - கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க தென்காசி தெற்கு மாவட்ட கழக செயல் வீரர்கள் கூட்டம் நாளை 05.08.2023 சனிக்கிழமை காலை 9 மணி அளவில் இலஞ்சி ஸ்ரீ ஷாரதாம்பா கிராண்டில் வைத்து மாவட்ட அவை தலைவர் சுந்தரமகாலிங்கம் தலைமையில் நடைபெறுகிறது. இந்நிகழ்வில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் பங்கேற்று சிறப்புரை ஆற்றுகிறார்.என தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவித்திருப்பதாவது.

தென்காசி தெற்கு மாவட்ட கழக செயல் வீரர்கள் கூட்டம் நாளை 5ம்தேதி சனிக்கிழமை காலை 9 மணி அளவில் இலஞ்சி ஸ்ரீ ஷாரதாம்பா கிராண்டில் வைத்து மாவட்ட அவை தலைவர் சுந்தர மகாலிங்கம் தலைமையில் நடைபெறுகிறது.

இந்தக் கூட்டத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் பங்கேற்று ஆலோசனை வழங்கி சிறப்புரை யாற்றுகிறார்.

இந்நிகழ்வில் மாநில, மாவட்ட, நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு, உறுப்பினர்கள் ஒன்றிய,

நகர, பேரூர், கழக செயலாளர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளை, கழக நிர்வாகிகள் அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக உடன்பிறப்புகள், மூத்த முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும்.

பொருள்:

1. முதலமைச்சர்கழகத் தலைவர் அவர்களின் சிறப்புரை! தென் மண்டல வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA2) பயிற்சி பாசறைக் கூட்டம் இராமநாதபுரத்தில் வருகிற ஆகஸ்ட் 17 ம் தேதி நடைபெறுகிறது சம்பந்தமாக.

2. கழக இளைஞரணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைப் படி கழகத்தில் புதிய இளைஞர்களை உறுப்பினராக சேர்ப்பது சம்பந்தமாக.

3. கழக வளர்ச்சிப் பணிகள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகர கிழக்கு பகுதி வாக்குச்சாவடி முகவர்களுக்கான (BLA 2) ஆய்வு கூட்டம் 02.08.2023, புதன் அன்று மாலை 6.00 மணிக்கு நாகர்கோவில், ஒழுகினசேரி மாவட்ட தலைமைக் கழக அலுவலகத்தில் மாநகர கிழக்கு பகுதி செயலாளர் என்.பி.துரை தலைமையிலும், நாகர்கோவில் மாநகரச் செயலாளர் ப.ஆனந்த் முன்னிலையிலும் நடைபெற்றது. கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட செயலாளர் – நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு வாக்குச்சாவடி முகவர்களுக்கு (BLA 2) ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.